# மோட்சத்துக்கும் அப்பால்

(இந்தியாவின் புராதான வேத சாஸ்திரங்களின் படி)

மூலம்

Beyond Liberation

ஶ்ரீ ஶ்ரீ மத் பக்தி வேதாந்த
நாராயண கோஸ்வாமி மகாராஜாவின்
வியாக்கியானங்களிலிருந்து தொகுக்கப் பட்டவை.

# Copyrights & Acknowledgements

இந்தப் புத்தகத்தை தமிழில் வெளியிட பல பக்தர்களும் பக்தைகளும் மிகவும் துணை செய்துள்ளனர். அவர்களுடைய உதவியே இந்நூல் சிறப்புடன் வெளிவர முக்கியக் காரணமாகும். அவர்களுக்கு எங்கள் அன்பான நன்றி.

**Graphics:** Smt Syamarani Didi

**மொழி பெயர்ப்பு:** குருஜி ஸ்ரீ பகவதி காந்த தாஸா Ph D

**சரிபார்த்தல்:**
ஸ்ரீமதி ராதிகா தேவி தாஸி
ஸ்ரீமதி கிருஷ்ண பிரியா தாஸி
ஸ்ரீ அஜய் கிருஷ்ண தாஸா Ph. D

**வெளியீடு:** கோகுல் பவன்
Opp: மாருதி ஸ்டோர்ஸ்
கொட்டாரம் - 629703,
கன்னியாகுமரி , தமிழ் நாடு, இந்தியா

**பதிப்பு:** முதல் பதிப்பு: 7 டிசம்பர் 2019
இரண்டாம் பதிப்பு: 19 ஆகஷ்ட் 2022

**தொடர்பு:** Email: bkdasa@gmail.com

Website: gokulbhavan.com
gokulbhajan.com

Youtube: youtube.com/c/bkdasa
Facebook: Bhagavati Kanta Dasa

Phone: +91 750 222 2794
+91 960 066 8797
+91 959 796 9492
+1 919 491 9536

# பொருளடக்கம்

Copyrights & Acknowledgements..............................................
முகவுரை............................................................................4
முன்னுரை..........................................................................5
1. கடவுளை நீ எனக்குக் காட்ட முடியுமா ?............................6
2. நேசத்தையும் பாசத்தையும் எங்கே வைக்க வேண்டும் ?......9
3. பூவுலக சுகங்கள் உண்மையான ஆனந்தத்தை அளிக்க முடியுமா ?...........................................................................11
4. பூவுலக போகங்கள் உயர்ந்தவை அல்ல............................13
5. மோட்சத்தின் வழி..............................................................15
6. காலத்தை விசாரம் செய்வோம்...........................................18
7. மோட்சத்துக்கும் அப்பால்...................................................19
8. உண்மையான அன்பு என்றால் என்ன?................................21
9. பரிசுத்தமான ஆன்மீக அன்பு வழி.......................................23
10. சக்தியை நாம் எங்கிருந்து பெறலாம் ?............................24
11. அன்பும் உறவுகளும்...........................................................25
12. தியானிப்பது எப்படி............................................................27
13. முடிவான உண்மை.............................................................29

# முகவுரை

நம் மனித வர்க்கத்துக்கு, வேறெங்கிலும் காண முடியாத அளவுக்கு எல்லா விதமான தேவையான ஞானங்களும் இந்தியாவின் வேத நூல்களில் அடங்கியுள்ளன. இவ்வுலகத்தில் இது வரையிலும் நாம் அறிந்த அத்தனை வகையான ஞானங்களுக்கும் இந்த மகத்தான நூல்களே ஆதாரங்களாக இருப்பதை நாம் காண்கிறோம். அவை ஜீவாத்மாக்கள் எப்போதும் தேடிக் கொண்டிருக்கும் பூலோக இந்திரிய சுகங்கள், மோட்சம் பெற வேண்டிய வழிகள் மற்றும் பரிசுத்தமான பக்தியுடன் ஆண்டவனுக்குத் தொண்டு செய்யும் வழிகள் இப்படி அத்தனை விதமான கேள்விகளுக்கும் பதில் அளிக்கின்றன. பகவானின் உருவமற்ற நிலை, அவரது ஆன்மீக சொரூபங்கள், மற்றும் அவரது விதம் விதமான சக்திகள் அனைத்தையும் பற்றி அவை நன்றாக விவரிக்கின்றன. அனைத்துக் காலங்களுக்கும் அப்பால் பட்ட, முதலும் முடிவுமற்ற இந்த ஞானங்கள், எந்த விதமான மாற்றமுமின்றி மாசற்ற நிலையில் பகவானிடமிருந்தே தொடங்கி, பரம்பரை பரம்பரையாக ஆச்சாரியார்களின் வழியாக உடையாத சங்கிலித் தொடர் போல் தொன்று தொட்டே வந்துள்ளன.

இந்த வேத நூல்களில் நாம் நமது எந்த விதமான சூழ்நிலைகளுக்கும் முடிவான பதில்கள் இருப்பதைக் குறிப்பாகக் காணலாம். நமக்குப் பரமானந்தத்தின் மேல் உள்ள ஆசைகளை நிறைவேற்றத் தக்க வழிமுறைகளைக் காட்டி கடைசியில் திருப்திப் படுத்துகின்றன. தற்போதைய நவீன உலகத்தில் மக்கள் வேதனை, குளப்பம், சண்டை சச்சரவுகள், கொடுமையான உறவுகள், பூலோக ஆசைகள் (மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை போன்றவை) மற்றும் ஏமாற்றங்களால் துயரத்துடன் வாழ்கிறார்கள். இருந்தாலும், பெரும் பான்மை யானவர்கள் இப்படிப் பட்டத் துயர வாழ்க்கையை, தவிர்க்க முடியாத உண்மைகள் அவை என்றும் உணர்கின்றனர். உண்மையாகவே ஒரு உத்தமமான இலக்கை அடைய வேண்டும் என்று நம் ஒவ்வொருவருக்கும் தாகம் உள்ளது. ஆனால் பூவுலக சுகங்களை அனுபவிக்கத் துடிக்கும் கட்டுக் கடங்காத நம் இந்திரியங்களும் நமது ஆழமான அறியாமையும் நம்மைத் தவறான பாதையில் இழுத்துச் சென்று விடுகின்றன!

# முன்னுரை

இந்தச் சிறு புத்தகத்தின் குறிக்கோள் மிகவும் மகத்தானது. இந்த உலகத்து மக்கள் ஆனந்தம் பெறுவதற்காகப் பின்பற்றும் மூன்று வழி முறைகளைப் பற்றி மிகச் சுருக்கமாக விவரிப்பதே அது. நம்மில் அநேக மானவர்கள் அந்த ஆனந்தத்தைத் தங்கள் முன்பாக நேரிலேயே காணப் படும் ஜடவுலகப் பொருட்களின் மூலமாக அடைய விழை கின்றனர். அவ்வாறு அவர்கள் தங்கள் உடலின் இந்திரியங்கள் தத்தம் உரிமை யுடன் கேட்கும் அத்தனை சுகங்களையும் ருசிக்கப் பாடுபடுகிறார்கள்.

இன்னும் சிலரோ ஜடவுலக சம்பந்தப் பட்ட அத்தனை விதமான இந்திரிய சுகங்களையும் புறக்கணித்து விட்டு, தன் உள் ஆத்மாவிடம் காணப்படும் அமைதியில் சரணடைந்து விடுகின்றனர். ஆனால் மிகவும் அபூர்வமாகப் பின்பற்றப் படும் ஒரு மூன்றாவது வழி யும் உள்ளது. அது மிகவும் உத்தமமான ஆன்மீகத்தில் விழிப் படைந்த ஜீவன் தேர்ந் தெடுப்பது. அந்த வழி பகவானுக்கும் ஜீவாத் மாக்களுக்கு மிடையில் உள்ள நிரந்தரமான உறவைப் புதுப்பிக்கிறது. அது மட்டுமே உண்மை யான நிரந்தரமான பேரானந்தத்தை வழங்குகிறது.

அடுத்து வரும் சிறு கதை இந்த மூன்று விதமான குறிக்கோள் களை விவரிக்க உதவும். ஆனால் எவ்வாறு ஒரு வழக்கறிஞர் முறை யாகச் சட்டங்களைத் தகுந்த பல்கலைக்கழகம் மூலம் பயின்று பின்னர் அதை எவ்வாறு பயன் படுத்துகிறாரோ, அதே போல் தகுந்த பரம்பரை வழியாக முறையாக வரும் இந்த வழிமுறைகளைக் கற்று அதன் பின் அவற்றைச் சரியாகச் செயல் படுத்துவது அவசியமாகும்.

August, 19, 2022
கீதை ஜெயந்தி

# 1. கடவுளை நீ எனக்குக் காட்ட முடியுமா ?

இந்தியாவில் ஒரு சமயம் ஒரு பேரரசன் கடவுளைக் காண வேண்டும் என்று மிகவும் ஆசைப் பட்டான். அவன் தன் பிரதம மந்திரியை அழைத்து இரண்டு கேள்விகள் கேட்டான். "நீ எனக்குக் கடவுளைக் காட்ட வேண்டும். அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதையும் தெளிவாக சொல்ல வேண்டும்" என்று கேட்டான். பிரதம மந்திரி மிகவும் ஞானம் நிறைந்தவராக இருந்திருந்தும் மிகவும் சரியான பதிலைக் கொடுக்க இயலாததால், அவர் மூன்று நாட்கள் அவதி கேட்டார். அரசன் அதற்குச் சம்மதித் தாலும் தகுந்த பதிலை அளிக்க இயலவில்லையென்றால் பிரதம மந்திரியின் மேல் உள்ள நம்பிக்கை பாதிக்கப்படும் என்று எச்சரிக்கையும் அளித்தான்.

பிரதம மந்திரி தன் வீட்டை அடைந்ததும் அரசனின் கேள்விக்குத் தகுந்த பதிலை அளிப்பதற்காக தன்னிடமிருந்த அத்தனை நூல்களையும் புரட்டி மிகப் பெரும் ஆராய்ச்சி செய்தார். இரண்டு நாட்கள் முழுவதுமாக ஆராய்ச்சி செய்தும் அவரால் தகுந்த பதில் எதையுமேக் கண்டு பிடிக்க இயலவில்லை. மூன்றாம் நாள், தன் பெரிய நூலக அறையில் உட்கார்ந்து வேறு வழியின்றித் தன்னுள் அழ ஆரம்பித்தார். அப்போது தன் ஐந்து வயது சிறுவன் இதைக் கண்டு ஆச்சரியப் பட்டு, "தந்தையே, நீங்கள் ஏன் இப்படிக் கவலையுடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"மகனே, அரசன் கேட்ட ஒரு கேள்விக்கு என்னால் தகுந்த பதிலைக் கண்டு பிடிக்க இயலவில்லை. அதனால் என் பதவியையே நான் இழக்க வேண்டி வரும்" என்று தந்தை பதிலளித்தார்.

"அது என்ன கேள்வி தந்தையே?" என்று சிறுவன் கேட்டான்.

"ஓ, அது ஒரு மிக மிகக் கடினமான கேள்வி. உன் சிற்றறிவுக்கு அது விளங்காது. நீ கவலைப்படாதே" என்று சிறுவனைப் போகச் சொன்னார்.

ஆனால் அந்தச் சிறுவன் பிடிவாதம் பிடித்துக் கேட்டதால் அந்தப் பிரதம மந்திரி அரசனின் கேள்விகளைப் பற்றிக் கூறினார்: "அரசனுக்குக் கடவுளைப் பார்க்க வேண்டுமாம். மேலும் கடவுள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றும் தெரிய வேண்டுமாம். நான் அத்தனை நூல்களையும் ஆராய்ச்சி செய்து விட்டேன். இந்தக் கேள்விக்குத் தகுந்த பதிலை என்னால் கண்டு பிடிக்கவே இயலவில்லை."

இதைக் கேட்ட சிறுவன் இனிமையாகச் சிரித்தவாறே, "தந்தையே! இது மிகவும் எளிதான கேள்வி! நீங்கள் நாளை அரச சபைக்குச் செல்லும் போது அரசனிடம் இந்தக் கேள்வி மிகவும் எளிதானது என்றும் இதற்கு உங்கள் சிறு பையன் கூட பதில் அளிப்பான் என்றும் கூறுங்கள். கடவுள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதையும் அவன் கூறுவான் என்று சொல்லுங்கள்" என்று பதிலளித்தான். இதைக் கேட்ட பிரதம மந்திரி தன் சிறுவனை நம்பிக்கையின்றி பரிதாபமாகப் பார்த்தார். ஆனால் அவனோ, "தந்தையே, நீங்கள் கவலையை விட்டு விடுங்கள். நான் உங்களைக் கண்டிப்பாக விழ விட மாட்டேன். உறுதியாக நம்புங்கள்" என்று ஆறுதல் கூறினான்.

வேறு எந்த வழியுமே இல்லாததால் பிரதம மந்திரி அதற்குச் சம்மதித்தார். அடுத்த நாள் காலையில் இருவரும் அரச சபைக்குச் சென்றனர். அரசன் பிரதம மந்திரியை அழைத்து, "என் அருமை பிரதம மந்திரியே! நீவிர் எனக்கு இப்போது கடவுளைக் காட்டி அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று கூற முடியுமா?" என்று கேட்டார்.

அதற்குப் பிரதம மந்திரி, "ஓ மதிப்பிற்குரிய அரசனே, இந்தக் கேள்வி மிக மிக எளிதானதால் நான் என்னுடைய இளைய மைந்தனைக் கூட்டிக் கொண்டு வந்துள்ளேன். அவனே உங்கள் கேள்விக்குப் பதிலை அளித்து விடுவான்" என்று தாழ்மையுடன் கூறினார்.

இந்தப் பதிலை சற்றும் எதிர்பார்க்காத அரசன் ஒரு கணம் ஆச்சரியப்பட்டாலும் அவன் அந்த சிறுவனை நோக்கி, "ஓ சிறுவனே, நீ எனக்குக் கடவுளைக் காட்ட முடியுமா, மற்றும் அவர் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதையும் கூற முடியுமா?" என்று கேட்டான்.

அதற்கு அந்தச் சிறுவன், "மதிப்பிற்குரிய அரசனே! அதற்கு முதலாவதாக ஒரு பானையில் கொஞ்சம் பால் வேண்டும்" என்று கேட்டான்.

சிறுவனின் வேண்டுகோளினால் அரசன் சிறிது சந்தேகப் பட்டாலும் கடைசியில் அவன் கேட்டதைக் கொண்டு வரச் செய்தான். பின்னர் அந்தச் சிறுவன் அரசனிடம், "என் அன்புமிக்க அரசனே, இந்தப் பாலினுள் வெண்ணெய் உள்ளதா?" என்று கேட்டான்.

அரசன் சிறிது நேரம் யோசித்துப் பின்னர், "ஆமாம், கண்டிப்பாக இந்தப் பாலில் வெண்ணெய் உள்ளது!" என்று பதிலளித்தான். அரசனின் பதிலைக் கேட்ட சிறுவன் உடனே, "மதிப்புக்குரிய அரசனே, அதை எனக்குத் தயவு செய்து காட்டுங்கள்" என்று விடுக்கென்றுக் கேட்டான்.

சிறுவனின் கேள்வியை எதிர்பார்க்காத அரசன் சமாளித்தான், "ஆம்... இந்தப் பாலில் வெண்ணெய் உள்ளது. ஆனால் முதலில் அதைக் கடைய வேண்டும். அப்போது தான் நாம் வெண்ணெயைப் பார்க்க முடியும்!"

"சரியாகச் சொன்னீர்கள்!", சிறுவன் தொடர்ந்தான், "அதே போல் தான் கடவுளைக் காண வேண்டுமானால் அதற்கு ஒரு வழி முறை உள்ளது. அந்த ஆன்மீக வழிமுறையை ஒருவன் பின்பற்றும் போது நம் முன்னால் கடவுள் கண்டிப்பாகத் தெரிகிறார். அப்படிப்பட்ட வழிமுறைகளை நாம் பின்பற்றவில்லையென்றால் நம்மால் அவரைக் காண முடியாது. பாலை நாம் கடைவது வரையிலும் வெண்ணெய் அதில் எவ்வாறு மறைந்துள்ளதோ, அதே போல் தான் கடவுளும் மறைந்திருக்கிறார்!"

அழகான தத்துவம் நிறைந்த இந்தப் பதிலைக் கேட்ட அரசன் மிகவும் திருப்தியடைந்தான். பின்னர் அவன் சிறுவனை நோக்கி இரண்டாவது கேள்வியையும் கேட்டான், "சரி, இனி, அந்தக் கடவுள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று சொல்."

"சரி கூறுகிறேன்..." சிறுவன் தொடர்ந்தான், "நீங்கள் இந்த ஆன்மீக சம்பந்தமான கேள்வியை ஒரு சிஷ்யன் எப்படித் தன் குருவிடமிருந்துக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அப்படித் தான் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் இங்கே நீங்கள் அரியணையிலும் நான் தரையிலுமல்லாவா உட்கார்ந்திருக்கிறோம். தக்க முறையின் படி நான் உயர்ந்த இடத்திலும் நீங்கள் தாழ்ந்த இடத்திலும் இருந்து தான் இதைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்."

இதைக் கேட்ட அரசன், சிறுவனின் பதிலிலிருந்த நியாயத்தை அறிந்து சிறுவனை அரியணையில் இருத்தி விட்டு, தான் தரையில் உட்கார்ந்து கொண்டான்.

அரியணையில் உட்கார்ந்திருந்த சிறுவன் பதிலளித்தான், "இப்போது கடவுள் இதைத் தான் செய்து கொண்டிருக்கிறார். சில சமயம் அவர் ஆண்டியை அரசனாகவும் மற்ற சமயம் அரசனை ஆண்டியாகவும் ஆக்குகிறார். ஒவ்வொரு ஜீவனின் கர்மங்களைப் பொறுத்து அவர் இவ்வாறு செய்கிறார். சில சமயம் நாம் அற்பமானப் பிறவிகளை எடுக்கிறோம். சில சமயம் நாம் மிகுந்த உயர்ந்த நிலையிலுள்ள பிறவிகளை எடுக்கிறோம் ..." சிறுவனின் இந்தப் பதிலைக் கேட்ட அரசன் மிகவும் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைந்தான். இந்த உண்மைகளை அனைத்து மக்களும் அறிய வேண்டும் என்று பிரகடனம் செய்தது மட்டுமின்றி, பிரதம மந்திரிக்கும் அவரது புத்திசாலித்தனமான மைந்தனுக்கும் பெரும் வெகு மதிகளையும் அளித்தான்.

# 2. நேசத்தையும் பாசத்தையும் எங்கே வைக்க வேண்டும் ?

மேற்கண்ட கதையில் குறிப்பிடப்பட்டதைப் போல் எந்த ஒரு குறிக்கோளை நாம் அடைய வேண்டுமானாலும் அதற்கான வழி முறையைக் கடைப் பிடிக்க வேண்டியது அவசியம். ஆனால் எந்த வழி முறையை நாம் உண்மையில் பின்பற்ற வேண்டும் என்பதை எப்படி அறிந்து கொள்வது?

நம் வாழ்க்கை முழுவதும் விதம் விதமான அறிவுரைகளை நாம் கேட்டுப் பின்பற்றியிருக்கிறோம். சமுதாய வழக்கங்கள், சொந்த நாட்டுச் சட்டங்கள், நம் நம்பிக்கைகள், பிடித்தங்கள், தாய் தந்தையர்களின் அறிவுரைகள், மற்றும் நண்பர்களின் அழுத்தங்கள் இவை அனைத்தும் நம்மை அடக்கி ஆள்கின்றன. படிக்கும் இளம் பருவத்தில் நம் ஆசிரியர்கள் நம்மை வழி நடத்தினார்கள். எத்தனையோ நூல்களில் எழுதப்பட்ட ஞானங்களையும் சமுதாய வழக்கங்களையும் நாம் பின்பற்ற முயற்சி செய்கிறோம். ஆனால் அவற்றை நாம் உதாசீனம் செய்து, நம் மனம் போன வழியில் வாழ்ந்தோமானால் இராஜாங்கம் நம்மைச் சும்மா விடுவதில்லை. தக்க தண்டனையை அனுபவிக்க நேருகிறது.

நாம் அனைவரும் சுதந்திரமான ஜீவாத்மாக்கள். ஆனால் நாம் நம் நேசத்தையும் பாசத்தையும் எங்கே வைக்க வேண்டுமென்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் முடிவாகக் கூறப் போனால், பரிசுத்தமான மார்க்கங்களைப் போதிப்பதும், மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள பரம்பரையிலிருந்து வருவதுமான ஞான சாஸ்திரங்களை மட்டுமே நாம் பின்பற்ற வேண்டும். அவை மட்டும் தான் நமக்கு உயர்ந்த பரிசுத்தமான ஆன்மீக நிலையை அளிக்கும். எத்தனையோ தத்துவ வாதிகள் பூவுலக வாழ்க்கையில் உண்டாகும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக காலம் காலமாக எத்தனையோ வழி முறைகளைக் கூறியுள்ளனர். ஆனால் இது வரையிலும் அவை எவற்றிலும் கூட இந்தியாவின் வேத கால நூல்களில் கூறியிருப்பது போல் சரியான வழிகளைக் காணவே இயலாது. மாறாக, உலகத்தில் இது வரையிலும் உதித்த எந்த ஒரு தத்துவமும் வேத கால நூல்களின் வேரிலிருந்தேக் கிளம்பியிருப்பதை நாம் தெளிவாகக் காணலாம். வேத நூல்கள் இந்த உலகத்திலேயே முதன் முதலில் தோன்றிய பழைய மொழிகளில் ஒன்றான சமஸ்கிருதத்தில் எழுதப் பட்டவை. வேத நூல்கள் அனைத்துக்கும் மூலம் பரம இறைவனே. அவை இறைவனிடமிருந்து

தோன்றி ஆதி காலம் தொட்டு பரம்பரை பரம்பரையாகக் கோடிக் கணக்கான வருடங்களாக மிகக் கவனமாகத் தலைமுறை தலைமுறையாக வந்துள்ளன. இந்த சாஸ்திரங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் மனித வர்க்கத்துக்கு விதம் விதமான குறிக்கோள்கள் இருப்பதையும், அவை அனைத்திலும் ஒரே ஒரு குறிக்கோள் மட்டும் சிகரமாக இருப்பதையும் காணலாம்.

வேத சாஸ்திரங்கள், அனைத்து ஜீவராசிகளும் வித்தியாசமான மூன்று விதமான வழிகளில் ஏதாவது ஒன்றைப் பிரதமமாகத் தங்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ பின் பற்றுகிறார்கள் என்று கூறுகிறது. அவை யாவை?

(1) அநேகமானவர்கள், இந்தப் பூதவுலகத்து இன்பங்களைத் தங்கள் இந்திரியங்கள் மூலமாக அனுபவித்து மகிழ்ச்சியாக இருக்க விழைகின்றனர். இதில் அவர்களது மனமும் புத்தியும் முழுவதுமாக ஈடுபடுகின்றன. இப்படிப் பட்டப் பூதவுலக இன்பங்களைச் சுகிப்பதையே "புக்தி" என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப் படுகிறது.

(2) இன்னும் சிலர், இந்தப் பூதவுலக இன்பங்கள் முகவும் அற்பமானவை என்றும், அவை உண்மையிலேயேத் துன்பங்கள் நிறைந்தது என்றும் உணர்ந்து, அவற்றை வெறுத்தவாறு, தங்கள் ஆத்மாவிலேயே இன்பத்தைக் காண விரும்புகின்றனர். அவ்வாறு அவர்கள் பிரம்ம மோட்சத்தை நாடுகின்றனர். இதற்கு "முக்தி" என்று பெயர்.

(3) ஆனால் மிகச் சொற்பமானவர்களோ, தங்களைப் பரம இறைவனுக்கேப் பரிசுத்தமான அன்பு சேவைக்காக அர்ப்பணிக்க ஆசைப் படுகின்றனர். இப்படி இறைவனுக்குப் பாசமுடன் சேவை செய்வதை "பக்தி" என்று அழைக்கிறோம். "பக்தி யோகா" என்றால் நம்மைப் பரிசுத்த அன்பு சேவையால் பரம இறைவனுடன் இணைப்பது என்று அர்த்தம்.

மேற்கண்ட மூன்று வழிகளையும் நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்தால், ஒவ்வொரு ஜீவனும் இவற்றில் ஏதாவது ஒரு பாதையில் தங்களை பிரதமமாக ஈடுபடுத்துவதைத் தெளிவாகக் காணலாம்.

# 3. பூவுலக சுகங்கள் உண்மையான ஆனந்தத்தை அளிக்க முடியுமா ?

இந்த ஜடவுலக ஐஸ்வர்யங்களினால் இன்பம் பெற ஆசைப்படுவது, முதலாவதும் மிகவும் பிரசித்தமான ஒன்றும் ஆகும். வேத நூல்களிலும் இதையே தான் முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. நாம் ஐஸ்வர்யங்களையும் புகழ்களையும் சம்பாதித்தோ, அல்லது நம் இந்திரியங்களால் சுகங்களை அனுபவித்தோ, இந்த உலகத்தில் இன்பமாக வாழ ஆசைப் படுகிறோம். இப்படி ஆசைப்படும் எவராலும், இந்தத் தற்காலிக இன்பங்களை அனுபவிக்க முடியும். வேண்டிய அளவு ஆசையும் அதற்கான முயற்சியும் இருந்தால் ஒருவனால் கண்டிப்பாக அதை அடைய முடியும். இதில் சந்தேகமே இல்லை.

வேத நூல்களில் இதற்கு வேண்டிய வழிமுறைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசைகளை யெல்லாம் நிவர்த்தி செய்யும் "கல்ப விருக்ஷ" மரத்தைப் போல், இவை வேத நூல்களின் ஒரு பாகமாகக் கொடுக்கப் பட்டுள்ளன. அதில் பூதவுலகத்தில் கிடைக்கும் அத்தனை விதமான சுகங்களைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடப்படாத எந்த விதமான பூவுலக இன்பத்தையும் வெளியே நாம் காணவே முடியாது.

அது மட்டுமல்லாமல் நம் பூவுலகத் திற்கும் மேலாக இருக்கும் சுவர்க்க லோகம் மற்றும் சத்திய லோகம் வரையிலான அனைத்து லோகங்களிலும் உள்ள சுக போகங்களைப் பற்றியும் வேத நூல்கலில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அதே சமயம் அந்த உயர்ந்த லோகங்களும் கூட பிறப்பு இறப்புக்களிலிருந்து விடு பட்டதல்ல என்பதையும், அங்கேயுள்ள ஜீவாத்மாக்களும் கூட பூலோகத்துக்குத் திரும்பவும் வர வேண்டும் என்பதைப் பற்றியும் எழுதப்பட்டுள்ளது.

இந்த உலகத்தில், பெரும்பாலான மக்களுக்கு ஆன்மீக உலகத்தைப் பற்றியும் அந்த உலகங்களிலுள்ள உயர்ந்த நிலைகளைப் பற்றியும் தெரியாமலிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. அவர்கள் தங்கள் மனத்தையும் புத்தியையும், பூதவுலக இன்பங்களை சுகிப்ப தற்காக மட்டுமே உபயோகிக்கிறார்கள். மனம், கண்கள், நாக்கு, காதுகள், வயிறு மற்றும் புணர் இந்திரிய உறுப்புக்கள் வழியாக இந்திரிய சுகங்களை முழுக்கவும் திணிக்கும் வாறே தான் இந்தப் பூவுலகமும் படைக்கப் பட்டுள்ளது. உலகில் பெரும் பான்மையான ஜனங்களின் மனங்கள் இந்த அற்பமான ஜடவுலக இன்பங்களை ருசிப்பதில் மட்டுமே ஈடுபட்டுள்ளன.

ஆனால் அதே சமயம் எத்தனை பேர்கள் இதில் வெற்றி பெற்றுள்ளனர்? எல்லா நேரமும் ஆனந்தமாக இருக்கும் ஒருவரை நீங்கள் கூற முடியுமா?

சிலர் எப்போதும் பூவுலகக் கஷ்டங்களையே அனுபவிக் கிறார்கள். அவர்கள் எளிய வாழ்க்கையை ஓட்டுவதற்காகத் தேவைப் படும் வெறும் உணவு, துணி, மற்றும் தங்கும் இடத்துக்கேத் . அவர்களுக்கு ஒரு ரொட்டித் துண்டே கூட ஆனந்தத்தை அளிக்கிறது. ஆனால் அதே அளவு ஆனந்தம் தான் ஒரு செல்வந்தர் தனக்கு ஒரு புதிய படகு வாங்குவதில் கிடைக்கிறது. பணக்காரனும் ஏழையும் ஒரே படத்தைத் தான் தன் டெலிவிஷனில் பார்க்கிறான். கடைசியாகப் பார்த்தோமானால் ஒரு செல்வந்தரின் ஆனந்தம் ஒரு ஏழையின் ஆனந்தத்தை விட ஒன்றும் பெரிதல்ல. ஆனால் நாம் இதில் எந்த நிலையில் இருந்தாலும் சரி, நம் ஆனந்தத்தை இன்னமும் அதிகப் படுத்த வேண்டும் என்றே எப்போதும் எண்ணுகிறோம். நமக்குக் கிடைத்தவற்றை வைத்துக் கொண்டு நாம் ஒரு போதும் திருப்தியாக இருப்பதில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், நம் மனம், உடல், இந்திரியங்களை ஒருபோதும் திருப்திப்படுத்தவே முடியாது. ஏனென்றால் அவை நித்தியமானவை அல்ல. அவை அழிந்து போகக் கூடியவைகள். நமது உண்மையான சொரூபம் ஜீவாத்மா. நம் ஜீவாத்மா நிரந்தரமானதால் அது நம்மை ஆழமாக இழுத்து ஆன்மீக உலகத்துடன் தொடர்பு வைப்பதற்காக ஆசைப்படுகிறது. அந்த ஆன்மீக உலகத்தில் மட்டுமே நாம் உண்மையான, நிரந்தரமான மகிழ்ச்சியை அடைய முடியும்.

# 4. பூவுலக போகங்கள் உயர்ந்தவை அல்ல

சிலர் தன்னுடைய அதிர்ஷ்டவசமாக, இந்தப் பூவுலக வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றியும், அதைத் தக்க வகையில் விளக்கிக் கொடுக்கும் முறையான குருக்களைப் பற்றியும் தேடி விசாரம் செய்கிறார்கள். ஜீவ வாழ்க்கையின் ஆழ்ந்த தத்துவங்களைப் பற்றி உபதேசிக்கும் குருவையும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அப்போது அவர்கள் பகவத் கீதையில் "உண்மையிலேயே புத்திசாலியான எவனும் துன்பங்களுக்குக் காரணங்களாக இருக்கும் பூவுலக இந்திரிய சுகங்களில் ஈடுபடுவதில்லை. ஓ குந்தியின் மைந்தனே! அந்த சுகங்களுக்கு ஆரம்பமும் முடிவும் உண்டு. எனவே புத்திசாலி அவற்றில் இன்பம் துய்ப்பதில்லை.." என்று இப்படி வரும் சுலோகங்களையும் காண்கிறார்கள்.

பூவுலக இன்பங்கள் உண்மையான நிரந்தரமான ஆனந்தத்தை ஒருபோதும் அளிக்க முடியாது என்பதை உண்மையாக நாம் உணரும் போது நம் இதயத்தை இந்திரிய வேட்கையிலிருந்து இழுத்துக் கொண்டு சுதந்திரம் பெறுகிறோம். பின்னர் இன்ப துன்பங்கள் நிறைந்த இந்தப் பூலோக வாழ்க்கையிலிருந்து மோட்சம் பெறுவதற்காக ஆசைப் படுகிறோம். இவ்வுலகில் எந்த ஒரு செயலுக்கும் ஒரு பதில் விளைவு உண்டு. இதை நாம் ஒரு கடிகாரத்தில் அங்கும் இங்குமாக ஊஞ்சல் போல் ஆடும் ஊசல் குண்டிலிருந்து காண்கிறோம். அதே போல் இன்பமும் துன்பமும். நமக்கு இன்பமோ துன்பமோ நேரிடுவதெல்லாம் ஒரு தற்காலிக நிலையே. ஏனென்றால் அவை சீக்கிரமே மாறி விடுகிறது. இதே போல் தான் ஒரு சிறு குழந்தையும். தற்போது மிகவும் மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் அடுத்த நிமிடம் அது அழுகிறது.

நாம் தற்போது இன்பமாக இருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் சீக்கிரத்தில் அந்த இன்பம் போய்த் துன்பம் வந்து சேருகிறது. இவையனைத்தையும் நாம் பார்க்கும் போது, மோட்சம் ஒன்றே நாம் கிட்ட வேண்டிய குறிக்கோள் என்று உறுதி கொள்கிறோம். அதுமட்டுமின்றி, இந்தப் பூவுல அனுபவ வாழ்க்கை நிரந்தரமான ஆனந்தத்தைத் தருவதில்லை என்றும், அது நம்மைக் கட்டிப் போட்டு விடுகிறது என்றும் உணர்கிறோம்.

எவையெல்லாம் கடைசியில் அழிந்து போய் விடுகிறதோ அவை அனைத்துமே பூவுலகப் பொருட்கள். அது ஆன்மீகப் பொருட்கள் அல்ல. பூவுலக வாழ்க்கை அல்பமான, சிற்றின்பத்தை மட்டுமே வழங்குகிறது. வேத

சாஸ்திரங்கள் நாம் அனைவரும் நிரந்தரமற்ற இந்த உடல்கள் அல்லவென்றும் நாம் எல்லோருமே ஜீவாத்மாக்கள் என்றும் பறை சாற்றுகின்றன. இவை அனைத்தை யையும் தாண்டியவை ஜீவாத்மாக்கள் என்றும் கூறுகின்றன. நாம் அனைவரும் இந்த உடல்களில் தற்காலிகமாக வாழும் ஜீவாத்மாக்கள். எனவே இந்தத் தற்காலிக சிற்றின்பங்கள் நமக்கு ஒருபோதும் உண்மையான ஆனந்தத்தை அளிக்கவே முடியாது.

நாம் இவற்றை அலசிப் பார்க்கும் போது, நம் அறிவு அதிகரிக் கிறது. கடைசியில், நாம் எதற்காக நிரந்தரமற்ற அற்ப இன்பத்திற்காக இப்படி ஓட வேண்டும் என்று புத்திசாலித்தனமாக நினைக்கிறோம்.

# 5. மோட்சத்தின் வழி

ஏன் நாம் எவருமே இறப்பதற்கு விரும்புவதில்லை? இதைப் பற்றி ஒரு முனிவர் அழகாகக் கூறினார்: "இந்த உலகத்தில் நம்மைச் சுற்றிலுமுள்ள எத்தனை எத்தனையோ ஜீவராசிகள், மனிதர்கள், மரங்கள், விலங்குகள் முதலாக அனைத்தும் தினமும் இறந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால் நாமோ, நமக்கு மட்டும் சாவு வராது என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்."

ஜீவாத்மாக்களான நாம், இயற்கையாகவே நிரந்தரமானவர்கள் என்றும், எனவே நாம் சாவதில்லை என்றும் வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன. அது மட்டுமின்றி, ஜீவாத்மாக்கள் ஆனந்த மயமானவை என்றும் அதே காரணத்தால் தான் நம் மனம் எப்போதும் நம் உரிமையான சொந்தச் சொத்தான பேரின்பத்தை அடைவதற்காக எப்போதும் ஏங்குகிறது என்றும் அந்த வேத நூல்கள் கூறுகின்றன.

ஜீவாத்மாவின் இயற்கையான குணம், நிரந்தரமாக நிகழ் காலத்தில் எந்த விதமான பூவுலக ஆசைகளுமின்றி முற்காலம் வருங்காலம் என்று எதுவுமின்றி எப்போதும் பேரானந்தமுடன் இருப்பதே. ஆனால் அடக்க முடியாத மனம் நேர் எதிரானவற்றை விரும்புகிறது. அது எப்போதும் அமைதியின்றி, அளவுக் கடங்காத ஆசைகளுடன், எப்படி நாம் வருங்காலத்திலும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்று அதற்காக வேண்டிய அத்தனைத் திட்டங்களையும் தீட்டுகிறது. நிச்சயமாக இந்தப் பூவுல இன்ப துன்பங்களை எறிந்து விட்டு மோட்ச நிலையை அடைய விரும்புவது ஒரு சரியான முடிவே. இவ்வாறு மோட்சத்தை அடைய வேண்டி விதம் விதமான சாதனங்களை நம்மில் பலரும் செய்து வருகின்றனர்.

அற்பமான பூவுலக சுகங்களை நம் இந்திரியங்கள் மூலமாக அனுபவிப்பதை விட, பிறப்பு இறப்புகளிலிருந்து விடுபட்டு மோட்சம் பெறுவதற்காக முயல்வது மிக மிகச் சிறந்தது. பூலோக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையிலிருந்து விடுபட வேண்டியது ஒவ்வொரு ஜீவாத்மாவின் கடமை. இதை ஒருவன் கீழ்வரும் நான்கு விதிகளைக் கடைப்பிடித்து அடையலாம்.

1. முதலில் நாம், எவை நிரந்தரமானவை என்றும் எவை நிரந்தரமற்றவை என்றும் தன் புத்தியின் மூலம் விவாதித்து அறிந்து கொள்ள வேண்டும்.

2. பின்னர் இந்தப் பூவுலக மற்றும் சொர்க்க இன்பங்களை வெறுத்து

விலக்க வேண்டும். இவையனைத்தையும் வேத நூல்கள் நிரந்தரமற்றவை என்று கூறுகின்றன.

3. மனத்தையும் இந்திரியங்களையும் அடக்க வேண்டும்.

4. மோட்சம் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு அந்த ஆசையை கவனமாக மேன்மேலும் வளர்க்க வேண்டும்.

முன்னால் நாம் குறிப்பிட்ட படி, வேத சாஸ்திரங்கள் நாம் விரும்பியதை யெல்லாம் வழங்கும் கல்ப விருக்ஷங்களாகும். அவை நம் வாழ்க்கையின் விதம் விதமான குறிக்கோள்களையும் அவற்றை அடைய நாம் எந்த விதமான சாதகங்களை எல்லாம் செய்ய வேண்டும் என்றும் தெளிவாக விவரிக்கின்றன.

மோட்சம் என்றால் என்ன? ஜீவாத்மா தன் பரிசுத்தமான ஆன்மீக நிலையை, தானாக உணர்வதையே மோட்சம் என்கிறோம். அப்படி மோட்சம் பெற்ற ஒவ்வொரு ஜீவாத்மாவும் சுயமாகவேத் திருப்தியடைந்து பேரின்பத்துடன் வீற்றிருக்கும். பூவுலக சுகங்கள் எதிலும் விருப்பமின்றி தன் உள்ளின்பத்திலேயே ரசித்து ஆனந்தமுடன் விளங்கும்.

அந்த மோட்ச நிலை எப்படியிருக்கும் என்பதை ஒரு சிறு பூலோக சம்பந்தமான உதாரணம் வழியாக நாம் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, இப்போது நாம் மிகவும் திருப்தியான அளவு ருசியான உணவுப் பதார்த்தங்களைச் சாப்பிட்டுள்ளோம் என்று வைத்துக் கொள்வோம். அப்படியே நாம் ஒரு சௌகரியமான படுக்கையிலும் சாய்ந்து கொண்டு குடும்பத்தார்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறோம். அப்போது நம் அத்தனை இந்திரியங் களும் திருப்தியுடன் உள்ளன. அவ்வாறு அனைத்து இந்திரியங்களும் திருப்தியாக இருப்பதால் நாம் கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் முழுவதுமாக மறந்து நிகழ் காலத்தில் மட்டுமே உள்ளோம். நாம் கடந்த காலத்தில் நடந்த எதைப் பற்றியும் நினைப்பதும் இல்லை, வருங்கால மகிழ்ச்சிக்காக வேண்டியத் திட்டங்கள் எதைப் பற்றி எண்ணுவதும் இல்லை. மாறாக நாம் இந்தப் பூவுலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு, தற்போதைய நிகழ் காலத்தில் முழுவதுமாகத் திளைத்து விடுகிறோம்.

அப்போது, எப்பொழுதும் சதா எண்ணங்களை உண்டு பண்ணி நம்மிடம் விடாமல் எதையாவதைக் கேட்டு அடம் பிடிக்கும் நம் மனம் அச்சமயம் சில நிமிடங்கள் தூங்கி விடுகிறது. அந்த நிலையில் நாம் நம்மை சந்தோஷத்துடன் காண்கிறோம். அந்த நிலையில் நமக்கு எந்த விதமான ஆசையும் இருப்பதில்லையாதலால் அது ஒரு மோட்ச மடைந்த நிலையைப் போல் உள்ளது. அந்தச் சமயத்தில் நாம் முழுவதுமாக

திருப்தியடைந்த நிலையில் இருப்பதால் நாம் நிகழ் காலத்தில் மட்டிலும் உள்ளோம். இந்த உலகத்தில் இவையெல்லாம் கண நேரத்துக்குள் மாறி விடுவதால் இந்த உதாரணம் மிகச் சரியானதல்ல. ஆனால் இது மோட்ச நிலையை ஒருவாறு விளக்க முயல்கிறது. உண்மையில் பாக்கியம் செய்த மோட்சமடைந்த ஜீவாத்மாக்கள் பெரிய அளவில் ஆனந்தம் பெறுவார்கள். அது மட்டுமல்லாமல் அந்த ஆனந்தம் நிரந்தரமாக நீடிக்கும் பேரானந்தமாகும்.

# 6. காலத்தை விசாரம் செய்வோம்

இந்த உலகத்தில், காலம் மூன்று விதங்களாக இயங்குகிறது: கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என்பவை அவை. பொதுவாக நாம் நிகழ் காலத்தில் திளைத்திருக்க முடிவதில்லை. காரணம் நாம் எப்போதும் நமது செயல்களில் ஒன்றி யிருக்க வேண்டியுள்ளது. மேலும் அவை அநேகமாகத் துன்பங்களாகத் தான் இருக்கும். அது மட்டுமல் லாமல் நமக்கு எப்போதும் மற்றவர்களாலோ அல்லது இயற்கை மற்றும் சீதோஷ்ணங்களாலோ நமது மனங்களாலோ தொடர்ந்து துன்பங்கள் தான் வந்து சேருகின்றன. நாம் நிகழ்காலம் முழுவதும் நம் வருங் காலத்தில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் எப்போதும் வேண்டியத் திட்டங்களை இடைவிடாமல் தீட்டிக் கொண்டிருக்கிறோம். நமக்கு இந்த நிகழ் காலத்தில் ஒரு போதும் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. ஆனால் வருங்காலம் மகிழ்ச்சியாக இருக்கும் என்று நம்புகிறோம். இப்படியாகக் காலம் சென்று கொண்டே இருக்கிறதே தவிர நம் மகிழ்ச்சியான வருங்காலம் வருவதே யில்லை!

நம் மனம் எப்போதும் எவ்வாறு இந்த உலகத்து நிலவரங் களையும் ஐஸ்வர்யங்களையும் நமக்கு சாதகமாகப் பயன் படுத்தலாம் என்பதிலேயே முழுக்கவும் ஈடுபட்டுள்ளது. நம் மனம் எப்போதும் ஆனந்தமாக இருக்க ஆசைப்படுகிறது. நாம் ஒவ்வொருவருமே மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறோம். இது நம் இயற்கை. நம் வாழ் நாட்கள் முழுவதும், ஒவ்வொரு கணமும் நாம் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டு, தடங்கலாக வரும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்காகச் செயலில் இறங்கியுள்ளோம். இதுவே நம் ஒரு முடிவேயில்லாத துன்பம்!

பூதலோகத்துடன் சம்பந்தப்பட்ட நம் மனத்துக்கும் நம் ஜீவாத்மாக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. பூதவுலக அனுபவத்தை ஜீவாத்மாவுக்கு எடுத்துச் செல்லும் ஒரு கருவியே நமது மனம். ஜீவாத்மாவோ எப்போதும் ஆனந்த மயமானது. அதற்கு எந்த விதமான ஆசைகளும் கிடையாது. ஆனால் மனமோ நேர் எதிரானது. எப்போதும் அளவற்ற ஆசைகளையுடையது. நாம் இந்த உலகத்தில் நம் மனத்துடன் ஒன்றி அதன் மூலமாக ஆனந்தத்தைப் பெற விரும்புவதால் தால் நாம் நம் ஆசைகள் நிவிர்த்திப் படாமல் ஏமான்று போய்கிறோம். அவ்வாறு நாம் துக்கங்களை அனுபவிக்கும் போது, நாம் அதிர்ஷ்ட சாலியாக இருந்தால், இதற்கும் மேலான ஒரு உண்மை இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அதை நாடுவோம். அப்போது நாம் நம்மின் உள்ளாலேயே திரும்பி, ஜீவாத்மாவின் பிரகாசத்தை நோக்குகிறோம்.

# 7. மோட்சத்துக்கும் அப்பால்

ஆனால் இப்போது ஒரு பேரதிசயமான இன்னொரு மிகவும் மகத்தான தத்துவத்தையும் காண்கிறோம். வேத சாஸ்திரங்கள் இப்படிப் பெரும் ஆனந்தத்தை நிரந்தரமாக அளிக்கும் மோட்சத்தை விடவும் மேலான இன்னொரு ஆன்மீக நிலையும் இருக்கிறது என்று கூறுகிறது! அது இந்த பூத உலகங்களையும் மோட்ச நிலையையும் கூடத் தாண்டி மோலாக விளங்குகிறது. உண்மையிலேயேக் கூறப் போனால் துன்பங்களிலிருந்து தப்பிப்பதற்காக மோட்சத்தை நாடுவது ஒரு வகையில் உண்மையான மோட்சமே அல்ல. அது ஒரு கீழ்த்தரமான மோட்ச நிலையே!

உண்மையான மோட்சம் என்ன? ஒரு ஜீவாத்மா பரம இறைவனிடமே தொடர்பு வைத்து அன்புச் சேவைகள் செய்யும் பாக்கியத்தைப் பெறுவதே அது. நம் மோட்ச நிலை நம்மை இறைவனின் ஒரு அன்புச் சேவகனாக ஆக்குவதற்குப் பதிலாக, அது நம்மை வெறும் சாதாரண ஜீவனாக மட்டும் செய்தால், நாம் நம் உண்மையான பரம குறிக்கோளை அடையவில்லை என்று பொருள். இதையே "உருவமற்ற மோட்சம்", அல்லது "பிரம்ம மோட்சம்" (அல்லது "நிர்வாணம்" ) என்று அழைப்பர். இது நம் பரம குறிக்கோள் அல்ல.

வெறுமனே பூதவுலகத் துன்பங்களை எறிந்து விட்டு மோட்சம் அடைவது பரம மோட்சத்தின் ஒரு கீழ்த் தரமான நிலையே யாகும். உண்மையான பரமானந்தம் நாம் நம் பரம இறைவனிடம் அன்பு செலுத்தி அவருக்குச் சேவை செய்வதே! உருவமற்ற மோட்சமான நிர்வாண நிலையில் நாம் பெறும் ஆனந்தம் சொற்பமே. ஏனென்றால் அங்கே ஜீவாத்மா தன்னுடன் உள்ள சுய ஆனந்தத்தை மட்டுமே பெறுகிறது. இந்த உண்மை ஒரு வகையில் ஒரு புதிராகவே இருக்கலாம். இங்கே இன்னொருவரின் இன்பத்தையும் சேர்க்க வேண்டும் என்று எண்ணவே வில்லை. எனவே இந்த சுய நல நிலையில் நாம் நம் ஜீவாத்மாவின் ஆனந்தத்தை மட்டும் தான் அனுபவிக்கிறோம். அளவற்ற ஆனந்த சாகரமான பரம இறைவனிடம் இனிய அன்பு செலுத்தி, பரஸ்பரம் அன்புகளைப் பரிமாறி அனுபவிக்கும் எல்லையற்ற அந்த பரம ஆனந்தத்தை நாம் அடையவில்லை!

பரம இறைவனிடம் அன்பான உறவு வைத்து அதனால் கிடைக்கப் படும் ஆனந்தமே உண்மையில் பரிசுத்தமான, எந்த விதமான கலப்படமும் அற்ற பேரானந்தம். இந்த உலகத்தில் நாம் கட்டுண்டிருக்கும் அத்தனை விதமான உறவுகளைப் பற்றியும் கோடிக்கணக்கான பாடல்கள்

இருக்கின்றன. ஆனால் இந்தப் பாடல்களில் விவரிக்கப்பட்டிருக்கும் நிரந்தரமற்ற உறவுகளும் மகிழ்ச்சியும் மிகவும் அல்பமானவையே. அப்படியே அந்த உறவுகள் மிகவும் பலமானதாக இருந்தாலும், சாவு வரும் போது எல்லாம் அழிந்து விடுகின்றன. ஆனால் நம் ஜீவாத்மாவோ, நிரந்தரமாக என்றென்றும் நிலைத்து நிற்கும் அந்த உன்னதமான அன்பு நிறைந்த "உறவைப்" பெறுவதற்காகத்தான் என்றென்றும் ஏங்குகிறது.

அன்பான உறவு என்று பேசும் போது அங்கே இரண்டு பேர்கள் தேவைப் படுகிறார்கள். "அன்பு" என்று ஆங்கிலத்தில் கூறும் போது அது வினைச் சொல்லாகவும் வரலாம், அல்லது பொருள் சொல்லாகவும் வரலாம். பூத உலகத்திலுள்ள துன்பங்களை விட்டுத் தப்பித்து அதனால் வரும் இன்பத்தை ஜீவாத்மா அனுபவிப்பது ஒரு வகையான இன்பம். ஆனால் அதை விடவும் மேலான ஆனந்தம் அந்த ஜீவாத்மா உண்மையில் விழித்தெழுந்து தனக்கும் தன் பரஸ்பர அன்பின் குறிக்கோளான பரம இறைவனுக்குமிடையில் உள்ள நிரந்தரமான உறவைப் புதுப்பிக்கும் போது வருவதே. இந்த வகையான பேரானந்தத்துக்கு எந்த விதமான எல்லைகளோ கட்டுப் பாடுகளோ கிடையாது. அது ஆழமே காண முடியாத முடிவற்ற ஆனந்த சாகரம்!

# 8. உண்மையான அன்பு என்றால் என்ன?

நிர்ணயிக்க முடியாத காலத் துவக்கத்திலிருந்தே ஜீவாத்மா பரிசுத்தமான அன்பைத் தேடிப் பரிதாபமாகக் கதறிக் கொண்டே யிருக்கிறது. இந்த அண்ட சராசரங்களிலும் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்று உண்டென்றால் அது பரிசுத்தமான அன்பு ஒன்றே ஆகும். அதை ருசிப்பதற்காக நாம் ஒவ்வொருவரும் ஏங்குகிறோம். அதை நாம் வெறுமனே தற்காலிகமாக மட்டும் சில சமயங்களில் ருசித்தால் போதும் என்றல்லாமல் சதா எப்போதுமே இடைவிடாமல் தொடர்ந்து ருசிக்க ஆசைப் படுகிறோம். உண்மையில் அதுவே நம் பிறப்புரிமையும் ஆகும். இந்த அடிப்படையானத் தேவையான பரஸ்பர அன்புப் பரிமாற்றம் நமக்குக் கிட்டும் போது தானாகவே நாம் உண்மையில் உயிருள்ள அர்த்தமுள்ள வாழ்க்கையை உணர்கிறோம். பரிசுத்த அன்பின் சக்தியை நம்மால் அளவிடவே இயலாது. நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவு அது சக்தி வாய்ந்தது. இந்த உலகத்திலும் அன்பே எங்கும் வியாபித்திருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். நாம் பரிசுத்த அன்பின் பிடிப்பிற்குள் வரும்போது மற்ற எல்லாவற்றையும் மறந்து விடுகிறோம், துறந்து விடுகிறோம். மேலும், ஒருவன் பரிசுத்த அன்பின் அடிப்படையைப் பற்றி கேள்விகள் எழுப்பினாலோ, சவால் விட்டாலோ, அவன் தோற்று விடுவது மிக நிச்சயம். ஏனென்றால் பரிசுத்தமான அன்புக்கு மேலாக வேறெதுவும் கிடையவே கிடையாது.

நிர்வாண அல்லது உருவமற்ற மோட்சத்தினால் கிடைக்கும் ஆனந்தத்திற்கும், பரம இறைவனிடம் பக்தி கொள்ளும் போது கிடைக்கும் ஆனந்தத்திற்கும் உள்ள வித்தியாசம் இந்தப் பரிசுத்தமான அன்பே தான்! மேலும், அன்பு என்ற வார்த்தையைப் பார்க்கும் போது, அந்த அன்பை வைக்க இன்னொருவரும் தேவை என்பதையும் உணர்த்துகிறது. உருவமற்ற பிரம்ம மோட்சத்தினால் கிடைக்கும் ஆனந்தம் வெறுமனே நம் பூதவுலக துன்பங்கள் மறைவதால் வரும் வெறும் துன்பமற்ற நிலையே தான். அது உலக ஆசைகளிலிருந்து விடுதலையை அளித்து அமைதியையும் நிம்மதியையும் வழங்குவதால் அது நமக்கு ஆனந்தம் போல் தெரிகிறது. ஆனால் உண்மையில் அது ஆனந்தம் அல்ல. மேலும் இந்த மோட்ச நிலைக்கும் அன்புக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. இந்தப் பிரம்ம மோட்சத்தில் இதயத்தை நெகிழ வைக்கும் இதமான அன்புப் பரிமாற்றங்களுக்கு இடமேயில்லை. ஆனால் பக்தியினால் மட்டும் தான் என்றும் நித்தியமாக விளங்கும் ஜீவாத்மாவுக்கும் பரம இறைவனுக்கு மிடையில் மகா உத்தமமான பரிசுத்த அன்பு உண்டாக முடியும்.

எண்ணிக்கையற்றப் பிறவியினால், இறைவனின் சக்திகளை நாம் நம் சுய நலத் தேவைகளுக்காக மட்டுமே உபயோகப் படுத்தி இந்தப் பூதவுலகங்களில் கட்டுண்டு, இறைவனின் அழகான ஆனந்த மயமான உண்மை சொரூபத்தை அறியாமலேயே போயிருக்கிறோம். இதற்குக் காரணம் நாம் எப்போதும் நம் பெருமைக்காகவும் நம் சக்திக் காகவுமே வாழ்ந்து வருகிறோம். பூதவுலக மாயையினால் ஆச்சரியத் திலும் ஆச்சரியமான, அழகுகளிலும் அழகான மகத்தான இறைவனைப் பற்ற இயலாமல் உள்ளோம். இந்தப் பெரும் துரதிர்ஷ்டமான நிலையில், ஆண்டவனிடம் அன்பு செலுத்துவதற்குப் பதிலாக முழுக்க நாத்திக வடிவமான உருவமற்ற பிரம்மம் என்ற கொள்கையை நோக்கி ஓடுகின்றனர். அவர்கள் ஆன்மீக உருவத்திலிருக்கும் பரம இறைவனிடமிருந்து எங்கெங்கும் வியாபித்திருக்கும் பரிசுத்த அன்பைப் பயம் நிறைந்த ஒன்றாகவே ஆக்கி விடுகின்றனர். அந்தப் பயத்தினால் பிரம்ம மோட்சத்தில் புகுந்து தன்னையே நிர்வாணமாக்கி மாய்த்து உருவ மற்றவர்களாக ஆகி விடுகின்றனர். ஆனால் பரம உண்மையை உண்மையாகத் தேடும் எவனையும் இவ்வாறு தொடர்ந்து ஏமாற்ற முடியாது. இப்போதில்லை யென்றாலும் எப்போதாவது அவன் கண்டிப்பாக பரம உண்மையை உணரும் போது, பரிசுத்தமான அன்பைப் பரம இறைவனிடம் கொள்ளும் மகத்தான இந்தப் பிரேம பக்தி நிலையின் உண்மையைப் பற்றி நிச்சயமாக அறிவான்!

# 9. பரிசுத்தமான ஆன்மீக அன்பு வழி

இறைவனிடம் பக்தி செலுத்தி, அன்புச் சேவைகள் செய்து வரும் பக்தி யோகத்தைப் பற்றி வேத நூல்களில் தெளிவாக எழுதப் பட்டுள்ளன. ஜீவாத்மாக்கள் எவ்வாறு தங்களை இறைவனிடம் தொடர்பு கொள்ள வைத்து, அன்புடன் சேவகங்கள் புரிந்து தங்கள் இதயங்கள் குளிர ஆனந்தம் அடையலாம் என்பதைப் பற்றி மகா முனிவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். நாம் முன்பு கண்ட கதையில், பாலினுள் வெண்ணையைக் காண முடிகிறதா என்று அந்தச் சிறுவன் மன்னனைக் கேட்டான். அதற்கு மன்னன், "ஆம், ஆனால் நாம் கடைந்தால் மட்டுமே அதைப் பார்க்க முடியும்" என்று பதிலளித்தான்.

எனவே இறைவனைக் காண வேண்டுமானால் வேண்டிய விதிமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும். அந்த விதி முறைகளை வேத கால மகா முனிவர்கள் விவரமாக எழுதியுள்ளனர். நாம் அவற்றைப் பின்பற்றி நடக்கும் போது நமக்கும் இறைவனுக்கும் இடையிலுள்ள நிரந்தரமான பரஸ்பர அன்புத் தொடர்பு வெளிப் படுகிறது. ஆனால் இதைக் கடைப் பிடிக்கவில்லையானால் அந்தத் தொடர்பு ஒருபோதும் வெளிப்படுவதில்லை. மேலும் இந்தப் புனிதமான விதிமுறைகளை நாம் நம் சொந்த முயற்சியினாலும் சக்தியினாலும் கடைப் பிடிக்க இயலாது. இந்த உலகத்திற்கும் அப்பால் பட்ட சக்தி அதற்குத் தேவை. ஆன்மீக உலகத்திலிருந்து இறைவனின் கருணையும் தயவும் அதற்குத் தேவை. இந்தச் சக்தியை நாம் எங்கிருந்து எவ்வாறு பெறலாம்?

# 10. சக்தியை நாம் எங்கிருந்து பெறலாம் ?

மகத்தான சுத்த பக்தி யோகத்தில் செல்ல வேண்டுமானால் முதலாவதாக அந்த மார்க்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பக்தரிடமிருந்து ஞானம், ஆதரவு மற்றும் பக்க பலமும் நமக்குத் தேவை. ஆழமான கிணற்றுக்குள் விழுந்த ஒருவனை வெளியேக் கொண்டு வர வேண்டுமானால், அது வெளியே நிலத்தில் உறுதியாக நின்று கொண்டு கயிற்றை இறக்கி உதவி செய்யும் ஒருவரால் மட்டும் தான் முடியும். அதே போல், நம் தற்போதைய துக்க கரமான நிலையிலிருந்து விடுதலைக் கிடைக்க வேண்டுமானால், வாழ்க்கையில் அனைத்தையும் உண்மையாக உணர்ந்த ஒரு மகானின் உதவி கண்டிப்பாகத் தேவை. உண்மையிலேயே கூறப் போனால் இதைத் தவிர வேறு எந்த வழியுமே கிடையாது.

எனவே அப்படிப் பட்ட ஒருவரைக் கண்டு பிடிப்பதில் நாம் மிகப் பெரும் முக்கியத்துவத்தை அளிக்க வேண்டும். அப்படிப் பட்ட ஆசை நம் நெஞ்சில் மிகத் தீர்க்கமாகத் தோன்றும் போது கண்டிப்பாக இறைவனின் பிரதி நிதி சீக்கிரத்திலேயே நம்மிடம் வருவார். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. நாம் அந்த மகானைச் சந்திப்பதற்காக பேரார்வம் வைத்திருக்க வேண்டும். அவ்வளவு தான், பின்னர் இறைவனின் கருணையினால் அந்த மகான் நம்மைச் சரியான வழியில் நடத்திக் கொண்டு போவார்.

# 11. அன்பும் உறவுகளும்

வேத சாஸ்திரங்கள் பரம இறைவனின் புனித நாமங்கள் அனைத்திலும் "கிருஷ்ணா" என்ற நாமமே மிகவும் தலை சிறந்தது என்று கூறுகின்றன. சமஸ்கிருதத்தில் "கிருஷ்ணா" என்றால் மிகவும் கவர்ச்சிகரமானவர் என்று பொருள். எனவே இந்தச் சமஸ்கிருதப் பெயர் இறைவனின் குணத்தைப் பற்றி மிக ஆழமாகக் காட்டுகிறது. தன் அனைத்து ஆன்மீக உலகங்களுக்கும் மேலான, அழகுக்கெல்லாம் மேலான அழகுள்ள உன்னதமான கோலோக பிருந்தாவனத்தில் அவர் எண்ணற்ற உறவினர்களையும் சகாக்களையும் கொண்டு ஆனந்தமாக வாசம் செய்து வருகிறார். அவரே பரம உண்மையும் பரம இறைவனுமாகும. தன்னுடன் வாழ்ந்தும், சேவைகள் புரிந்தும் வரும் எண்ணற்ற ஜீவன்களுடம் அவர் அளவற்ற அன்பைப் பரிமாறிக் கொண்டிருக்கிறார்.

அவரும் அவரது சகாக்களும் உறவினர்களும் பரஸ்பர அன்பைப் பரிமாறியவாறு நிகழ்த்தும் அத்தனை அற்புதங்களான லீலைகளும் எவருடைய இதயத்தையும் மனத்தையும் கவர்ந்து இழுத்து ஆனந்தத்தில் ஆழ்த்தி விடும். இப்படி அவர்கள் நடத்தும் எண்ணற்ற லீலைகளை மகா முனிவர்கள் தங்கள் தீர்க்க தரிசனம் வழியாக நேரடியாகவேக் கண்டு எழுதி வைத்துள்ளனர். அவை ஸ்ரீ கிருஷ்ணரும் அவரது நெருங்கிய பக்தர்களும் எவ்வாறு பரிசுத்தமான அன்பினால் கட்டப் பட்டுள்ளனர் என்பதைத் தெளிவாக விளக்குகின்றன.

நம் நிரந்தரமான வீடு எது? அது ஸ்ரீ கிருஷ்ணர் இருக்கும் மகத்தான ஆன்மீக உலகமே! அங்கே மட்டும் தான் நாம் மிகவும் உச்ச நிலையான மற்றும் மிகவும் சக்தி வாய்ந்த அன்புப் பிணைப்பைக் காண முடியும். நம் உண்மையான ஆனந்த சொரூபத்தை உணர்ந்து பரம பேரானந்தத்துடன் நிரந்தரமாக இருக்க முடியும். மாறாக, பிரம்ம மோட்சத்தை விரும்பும் ஜீவாத்மாவோ, தானே கிருஷ்ணராக ஆக வேண்டும் என்று ஆசைப்படுகின்றன. ஆனால் அது சாத்தியமானதல்ல. எப்படி நான் உங்களாக ஆக முடியாதோ, நீங்கள் நானாக ஆக முடியாதோ அதே போல் தான் இது. நாம் ஒருபோதும் அளவில்லாத பிரம்மாண்டங்களைச் சிருஷ்டி செய்யும் இறைவனைப் போல் ஆகவே முடியாது.

பிரம்ம மோட்சம் "தன்னலத்தை" அடிப்படையாகக் கொண்டது. அதில் எந்த விதமான பரஸ்பர அன்புப் பரிமாற்றமேக் கிடையாது. அது மிகவும் அல்பமானது. மாறாக, நாம் நம்மை ஸ்ரீ கிருஷ்ணருக்காகவே அர்ப்பணம் செய்து அவருக்கு அன்புச் சேவைகள் செய்து வாழ விரும்பும்

போது, அதனால் கிடைக்கும் இன்பமோ எல்லையற்றது. உண்மையிலேயே, எந்த வித ஆன்மீக சாதகங்களும் நமக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இடையில் உள்ள பரஸ்பரமான அன்புப் பிணைப்பைப் புதிப்பிப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். அவை நம் ஜீவாத்மாவின் நிரந்தரமான இயற்கைக் குணத்தைக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிப் பிறரிடமிருந்து, குறிப்பாக அவரது நெருங்கிய பக்தர்களிடமிருந்து கேட்டும், படித்தும் வந்தால் நமக்கும் கிருஷ்ணருக்கும் நெருக்கமான தொடர்பு உண்டாவதை உணர்வோம். ஸ்ரீ கிருஷ்ணரின் பக்தர்களுக்கு அவருடைய மகத்தான குணங்களும், லீலைகளும் நன்றாகத் தெரியும். நாம் இவ்வாறு நம் வாழ் நாட்களை ஸ்ரீ கிருஷ்ண சேவையிலேயே அர்ப்பணிக்கும் போது பின்னர் நாம் நம் உடலை விட்டுச் செல்லும் போது அவரிடமே சென்று விடுவோம்!

# 12. தியானிப்பது எப்படி

நாம் இப்போது வாழ்ந்து வரும் கலி காலத்தில் ஒரு பெரும் மகிமை உள்ளது. என்ன அது? நாம் இறைவனின் நாமங்களைத் தொடர்ந்து ஜெபித்து வந்தாலே போதும். அது நமக்கும் அவருக்குமுள்ள உறவைத் துலக்கி விடும்! இறைவனின் நாம ஜெபம் நம் உண்மையான சொரூபத்தைத் துலக்கி நமக்குப் பேரானந்தத்தை அளிக்கும். இயேசு கிறிஸ்து கூட "நீர் உம் நாமங்களுடன் மகிமையாக இருக்கிறீர்" என்று தான் அவரது வழிபாட்டை ஆரம்பித்தார். ஸ்ரீ கிருஷ்ணர் தன் நாமங் களில் எல்லா சக்திகளையும் வைத்துள்ளார். அதனால் நாம் அவற்றை ஜெபிக்கும் போது நமக்கும் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இடையிலு முள்ள ஆனந்தமான உறவு வெளிப்படுகிறது. ஸ்ரீ கிருஷ்ணரின் புனித நாமங்களை ஜெபிப்பது ஒரு மகத்துவான ஆன்மீக சாதகம். நாம் அவற்றை எந்த அளவுக்கு உறுதியாக ஜெபிக்கிறோமோ அந்த அளவுக்கு அதன் சக்தி வெளிப்படுகிறது. பின்னர் படிப்படியாக அது நம் சித்தத்தைத் தூய்மைப் படுத்துகிறது.

உண்மையிலேயே, இந்த நாம ஜெபத்தை மட்டும் செய்தே மேற் கூறப்பட்ட மூன்று குறிக்கோள்களில் எந்தக் குறிக்கோளையும் அடைய முடியும். நாம் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கையில்லை யென்றால் நீங்களே சோதனை செய்து அதன் பயன்களைக் கண்டு கொள்ளுங்கள். இறைவனின் மகத்தான நாமங்களை ஜெபம் செய்தே நம்மை நிரந்தர மாக இறைவனுடன் ஐக்கியப் படுத்திவிடலாம். இந்த ஜெபங்களில் எல்லாவற்றிலும் மேலான ஜெபமே மகாமந்திரம் என்று கூறப்படுகின்றது. அது என்ன?

ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா, ஹரே ஹரே
ஹரே ராமா ஹரே ராமா
ராமா ராமா ஹரே ஹரே

இந்த மகா மந்திரத்தை நாம் தொடர்ந்து ஜெபிக்கும் போது நாம் மிகவும் உயர்ந்த ஒரு ஆன்மீக நிலையைக் கண்டிப்பாக உணர்வோம். இந்த மந்திரத்தை நாம் எங்கேயும் எப்போதும் ஜெபிக்கலாம் என்றாலும், அதைக் கவனத்துடன் ஆழ்ந்து ஜெபிக்கும் போது அதன் பலன் சீக்கிரமாகவும் அதிகமாகவும் கிடைக்கிறது. நம்மை எப்போதும் ஆனந்தமாக இருக்க வைக்கும். இவற்றுடன் ஸ்ரீ கிருஷ்ணருடன் முன்பாகவே உறவை வளர்த்துள்ள அன்புப் பக்தர்களின் அறிவுரை களும்,

அவர்களுடைய ஆசிகளும் மற்றும் சாஸ்திர ஞானங்களும் கிடைத்தால் இந்த ஜெபம் நம்மை சீக்கிரமாகவே பிரேம அன்பு சாகரத்துக்குக் கொண்டு சென்று விடும்.

பரம இறைவனுக்கு எத்தனை எத்தனையோ நாமங்கள் உள்ளன. ஜெஹோவா, அல்லா, புத்தா, யஹ்வெஹ், ராமா, கிருஷ்ணா என்பவை அவைகளில் சில. ஆனால் வேத சாஸ்திரங்கள், இந்த அனைத்து நாமங்களிலும் "ராமா, கிருஷ்ணா" என்ற நாமங்கள் மிக மிக சக்தியும் புனிதமும் வாய்ந்தவைகள் என்று கூறுகின்றன. அவையே எல்லாவற்றிலும் மேலான பலனையும் அளிக்கும்.

# 13. முடிவான உண்மை

ஜீவாத்மாவின் அடித்தளமான இயற்கை ஆனந்தமாக இருப்பதே! நம் வாழ்க்கையின் ஒரே குறிக்கோளும் இலட்சியமும் எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்பதே. அந்த ஆனந்தத்தை அடைய நாம் கீழ்வரும் மூன்று வழிகளில் ஒன்றைக் கையாள்கிறோம்.

(1) நம் உடலிலுள்ள இந்திரியங்களின் மூலம் நிரந்தரமற்ற இந்தப் பூதவுலக இன்பங்களைச் சுகிக்கிறோம்.

(2) பூதவுலக இன்ப துன்பங்களையும் இந்திரிய சுகங்களையும் எறிந்து விட்டு நம் ஆத்மாவின் இயற்கையான இன்பத்தைச் சுகிக்கிறோம். இந்தச் சுகத்தை நமது ஆத்மாவின் சூஷ்ம இந்திரியம் மூலமாக ரசிக்கிறோம்.

(3) நாம் பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணருக்கு அன்புச் சேவகனாகச் சேவகம் புரிந்து, நம் இயற்கையான நித்திய ஆத்ம இந்திரியங்கள் மூலம் உண்மையான பேரானந்தத்தைப் பெறுகிறோம்.

இவைகள் தனித்தனியாக ஒரே இலட்சியத்தில் போய் முடிவதில்லை. முதல் இரண்டு வகைகளும் நம் பூதவுலக சம்பந்தப் பட்ட இந்திரியங்களைச் சார்ந்தவை. மேலும், இரண்டாவது வகையான பிரம்ம மோட்சம், ஆண்டவனுக்குச் சேவை செய்யும் இன்பத்துக்குக் கொண்டு செல்வதில்லை. ஆனால் மூன்றாவது வகையோ மிகவும் மகத்தானது. அது பரிசுத்தமான எந்த விதமானக் கலப்படமும் இல்லாத அன்பை ஜீவாத்மா "ஸ்ரீ கிருஷ்ணரிடம் மட்டுமே" வைத்து உண்மையான பேரானந்தத்துடன் இருப்பது.

முதல் வகையான பூவுலக இன்பத்தை, இரண்டாவது வகை யான பிரம்ம மோட்ச இன்பத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பூவுலக இன்பம் மகா அல்பமாகத் தெரியும். ஆனால் பிரம்ம மோட்ச இன்பத்தை, மூன்றாவது வகையான கிருஷ்ண பக்தி சேவையின் இன்பத்துடன் ஒப்பிடும் போது, பிரம்ம மோட்சம் ஒப்பிடக்கூடத் தகுதி யில்லாமல் போய் விடுகிறது! அவ்வளவு மகிமையானது கிருஷ்ண பக்தி சேவை! ஸ்ரீ கிருஷ்ணருடன் ஜீவாத்மாக்கள் பரஸ்பர பிரேமையில் கட்டுண்டு சுகிக்கும் ஆனந்தத்தை ஒருபோதும் அளவிட இயலாது! மேலும் அந்த ஆனந்தம் எப்போதும் கூடிக் கொண்டே செல்வது. வரம்பு எதுவுமே இல்லாதது. பிரம்ம மோட்சம் அல்ப தூசியாகி விடுகிறது. இந்த மகத்தான உண்மையை உண்மையிலேயே நேரில் திளைத்துக் கொண்டிருக்கும் ஒரு

ஜீவனால் மட்டும் தான் புரிந்து கொள்ள முடியும்.

இந்த மிகச் சிறு புத்தகத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளவை, இந்தியாவின் வேத சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள கடல் போன்ற ஞானக் களஞ்சியங்களிலிருந்து எடுக்கப் பட்ட மிக மிகச் சிறு பாகமேயாகும். அதையும் இங்கே மிகவும் சுருக்கமாக எளிதான வார்த்தைகளில் கொடுத்துள்ளோம். இதை நீங்கள் படித்து அதன் மூலம் உங்களுக்குப் பரம இறைவனான ஸ்ரீ கிருஷ்ணருக்கு அன்பு சேவகம் செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டாகினால் போதும். அதுவே இந்த புத்தகத்தின் மிகப் பெரும் வெற்றியாகும்!

இதைப் பற்றி உங்களுக்கு மேலும் அதிகமாக அறிய வேண்டும் என்ற ஆவல் தோன்றினால் ஹரே கிருஷ்ண பக்தி இயக்கம் பற்பல மொழிகளிலும் பிரசுரித்திருக்கும் நூல்களைப் படிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம். அவை இப்போது எங்கும் கிடைக்கின்றன. நீங்கள் அவற்றில் விருப்பம் வைத்தாலே போதும், அவை தானாகவே மாயா வித்தை போல் உங்கள் கைகளில் வந்து கிடைத்து விடும்!

ஹரே கிருஷ்ணா!

-நிறைந்தது-